# இந்திய பள்ளிகள் விளையாட்டு குழும 61-வது - தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் 2015-2016 தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.





பள்ளிக்கல்வித்துறை தருமபுரி மாவட்டம் இந்தியப்பள்ளிகள் விளையாட்டு குழும 61-வது தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் 2015-2016 (வளையப்பந்து மற்றும் பூப்பந்து) போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (02.01.2016) நடைபெற்றது.

61-வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையேற்று தேசிய கொடியினை ஏற்றி வைத்து மாணவ, மாணவியர்களின் அணி வகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டு ஒலிம்பிக் சுடரை ஏற்றி வளையப்பந்து மற்றும் பூப்பந்து போட்டிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது :-

இந்திய அளவில் நடைபெறக் கூடிய மாபெரும் விளையாட்டுப் போட்டிகளான (வளையப்பந்து மற்றும் பூப்பந்து) போட்டியை தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் நடத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டு இன்றையதினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்போட்டிகளில் இந்தியாவில் உள்ள 17 மாநிலங்களான தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திரா, கேரளா, கர்நாடகம், தெலுங்கானா, பீகார், சண்டிகர், சட்டீஸ்கர், டெல்லி, குஜராத், அரியானா, மத்தியபிரதேஷ், மகாராஸ்டிரா, ஒடிஸா, உத்திரபிரதேசம், இலட்சத்தீவு, வித்யபாரதி, சி.பி.எஸ்.சி. வெல்பர் ஸ்போர்ட்ஸ் ஆர்கனிசேசன் ஆகிய மாநிலங்களை சார்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்கிறார்கள். (வளையப்பந்து மற்றும் பூப்பந்து) போட்டிகள் தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் நடைபெறுவது நமக்கெல்லாம் சிறப்பு. நமது மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விளையாட்டுப் போட்டிகள் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடத்தப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத்துறைக்கு பல்வேறு நிதிகளை ஒதுக்கி புதிய சாதனைகளை நிகழ்த்தி உள்ளார். தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 கிராம பஞ்சாயத்துகளிலும் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துகளிலும் ரூ. 20 ஆயிரம் அளவிலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது. காவல் துறையின் சார்பில் 36 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் மூலம் மக்களிடையே நல்லுறவை வளர்த்திட உதவும்.

இந்திய குடியரசு தலைவரிடம் கல்வியில் சிறந்த சாதனை படைத்ததற்கான விருது மற்றும் மின் ஆளுமை விருதினை தருமபுரி மாவட்டம் 2-ம் இடத்தைப் பிடித்து பரிசு பெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கு எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் பேசினார்.

இப்போட்டி 02.01.2016 முதல் 05.01.2016 வரை நடைபெறுகிறது. மாணவ, மாணவிகள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டிகளில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ. லோகநாதன்,இ.கா.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. மகேஸ்வரி, மேற்பார்வையாளர் திரு. அமித்சா, மாவட்ட கல்வி அலுவலர் திரு.நடராஜன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் திரு. நஞ்சப்பன், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (பெண்) திரு. கலைச்செல்வன், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (ஆண்) திரு. பீட்டர் சுப்பாரெட்டி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் திரு. பாலமுருகன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி